**உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) - 2023**

---

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 6026 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4.09(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அமைச்சு மற்றும் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன.

அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டக் காலப்பகுதி ஆறு மாதங்களிற்கு மேலும் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டது. | இது செயற்திட்ட அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. எனினும், 2023 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட கால இடைவெளியில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் அமைச்சில் நடாத்தப்பட்டன. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இச் செயற்திட்டத்தின் கீழ் நோயியல் துறைக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று 04 மாடிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், ரூபா 153 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 02 மாடிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | நான்கு தளங்களுக்கும் அனைத்து வெளிப்புற வேலைகளுடன் மொத்த கட்டமைப்பு பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. கொரோனா தொற்றுநோயால் எதிர்பாராத விலை முரண் ஏற்பட்டதுடன் அதிகாரிகள் எடுத்த முடிவின் அடிப்படையில், நிர்மாணப் பணிகள் ஆரம்பத்தில் கிடைக்கக்கூடிய பாதீட்டு ஒதுக்கீட்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டு, பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இரண்டு தளங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டன. நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு கட்டிடத்தின் மிகுதி இறுதிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் மூலம் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் (FMS) ELTA-ELSE அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் இருந்து ரூபா 15 மில்லியனை செலவிட்டு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட ஐடியா உருவாக்கும் வணிக அபிவிருத்தி மற்றும் சமூக உணர்ச்சி அபிவிருத்தி நிலையம் (Idea Generating Business Incubation and Social Emotional Development Centre), மென்மையான தளபாட வரவேற்பு பகுதி மற்றும் பொதுவான ஒன்றுகூடல் பகுதி மற்றும் காகித மீள்சுழற்சி நிலையம் மற்றும் ரூபா 3.4 மில்லியன் செலவிட்டு காகிதத்தை மீள்சுழற்சி செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2023 திசெம்பர் வரையிலும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஐடியா உருவாக்கும் வணிக அபிவிருத்தி மற்றும் சமூக உணர்ச்சி அபிவிருத்தி நிலையம் நாளாந்தம் வேலை நேரத்தில் செயற்படும் அலுவலக இடம் காணப்படவில்லை. மேலும் செயற்திட்ட முன்மொழிவில் நாம் குறிப்பிட்டுள்ளவாறு பல நோக்கங்களுக்காக இது பொதுவான இடமாகப் பயன்படுத்தப்படுகிறது.<br><br>காகித மீள்சுழற்சி நிலையம் மற்றும் உபகரணங்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீடங்கள்/ பிரிவுகளின் நிராகரிக்கப்பட்ட காகிதத்தைப் பயன்படுத்தி அவர்களின் பணிகள் மற்றும் செயற்திட்டங்களுக்காக FMS மாணவர்களால் செயற்படுத்தப்படுகின்றன. பல்கலைக்கழகத்தில் உள்ள பணியாளர் பற்றாக்குறையால் காகித மீள்சுழற்சி நிலையத்தில் பணிபுரிவதற்கு முழுநேரப் பணி உதவித்தொகையை ஒதுக்க முடியாதிருந்ததுடன் இது வணிக நிலை செயற்பாட்டிற்கு முக்கிய தடையாக உள்ளது. | வளமூலங்கள் தாமதமின்றி பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆகஸ்ட் முதல் 2020 சனவரி வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகை நடவடிக்கைகள் 01 வருடத்திலிருந்து 03 வருடங்கள் வரை காலதாமதமாகி, சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்றத்தால் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி ரூபா 18 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. | முகாமைத்துவ கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | செயற்திட்டப் பணிகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் AHEAD செயற்திட்டத்தினூடாக PhD பட்டப்படிப்பிற்காக புலமைப்பரிசில்களுடன் வெளிநாடு சென்றிருந்த 06 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 20 விரிவுரையாளர்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தமது கலாநிதிப் பட்டங்களை பூர்த்தி செய்திருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | PhD புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் எழுப்பப்பட்ட பிரச்சனைகள் குறித்து உரிய பல்கலைக்கழகங்களின் VC இன் விசேட கவனத்தை OMST கவர்ந்துகொள்ளும். பிணைமுறி உடன்படிக்கையின் நிபந்தனைகளை அமுல்ப்படுத்துவது பல்கலைக்கழகங்களின் பொறுப்பாகும். | PhD ஐ பூர்த்தி செய்திருக்காத விரிவுரையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தற்போது பயன்படுத்தப்படும் வீட்டு உரத் தொட்டியை பெரிய அளவிலான உற்பத்தி மாதிரியாகவும், உயர் – தர கால்நடை தீவன வணிக உற்பத்தியாகவும் மற்றும் கரிம உரங்களாகவும் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் (AHEAD) செயற்திட்டத்தின் உலக வங்கி கடன் உதவியின் கீழ் ரூபா 50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பாரிய அளவிலான உரத் தொட்டிக்காக அறிவிக்கப்பட்டிருந்த அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் அந்த அலகுடன் கூட்டாகச் செயற்படுகின்ற அறுவடைப் பிரிவை வணிக மயமாக்க முடியவில்லை. அதனால் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் அந்த உணவை பதப்படுத்தும் தொழில்நுட்ப முறைக்கு காப்புரிமை விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப முறையின் குறைபாடுகள் காரணமாக இவ் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டிருந்தது. உரிய அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததாலும் எதிர்பார்த்த நலன்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததாலும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பயனற்றிருந்தன. | கொவிட் தொற்றுநோயால் முழு செயற்திட்ட கால எல்லையும் பெரிதும் பாதிக்கப்பட்டது. சிறிய உரக் குவியல்கள் நாங்கள் எதிர்பார்த்தது போல் இல்லை. இது தொற்றுநோய் மற்றும் நடமாட்டம், வீடுகளுக்குச் செல்வதற்கான கட்டுப்பாடுகளால் ஏற்பட்டது. எனவே, சிறிய பானையை வெற்றிகரமாக சோதிக்க முடியவில்லை. சிறிய பானையை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படை காப்புரிமை ஆவணங்களில் பெரிய குறைபாடுகள் இருந்தது. இது வெளிப்புற சூழலில் நட்பாக வடிவமைக்கப்படவில்லை.<br>காப்புரிமை அங்கீகார முகவரான இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் கருத்தில் கொண்டிருக்கவில்லை. எனவே, இந்த சோதனைகள் நடாத்தப்பட்ட சூழலில் கடுமையான மழை, ஈரப்பதம் மற்றும் இரவுநேர வெப்பநிலை நிலைமைகள் நுண்ணுயிர் செயற்பாடு மற்றும் துர்நாற்றத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம். | இறுதி முடிவை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல்/ அமுல்ப்படுத்துதல்/ பூர்த்திசெய்தலில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2021 திசெம்பர் 15 இல் ரூபா 432 மில்லியன் தொகையான ஒப்பந்த பெறுமதியில் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் முறைமைகள் தொழில்நுட்பத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் 2023 யூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அது 2023 திசெம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், 36 சதவீத நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் 31 வரை மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்த கட்டம் II ஐ 2023 யூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்தது. இந்த நம்பிக்கையுடன், தொழில்நுட்ப பீடத்திற்கு மாணவர் உட்சேர்க்கையை அதிகரிக்கும் அரசாங்கத்தின் கொள்கையுடன் உடனடியாக இணங்கியது. தற்போது ஒவ்வொரு கல்வியாண்டிலும் சுமார் 400 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். தற்போதுள்ள கட்டிட வசதிகள் அதிகரித்த மாணவர் உட்சேர்க்கைக்கு ஏற்ற வகையில் போதுமானதாக இருக்கவில்லை. இது கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் தரத்தை பாதிப்பதுடன் மாணவர் அமைதியின்மைக்கு வழிவகுக்கும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் AHEAD இல் கிடைக்கப்பெறும் செலவிடப்படாத பணத்தை கல்வி அமைச்சுக்கு ஒதுக்கி திருப்பிவிடுமாறு வேண்டியது. இதனால் பல்கலைக்கழகம் தொடர்ந்து வேலைகளை பூர்த்தி செய்ய முடியும். இது தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு உதவுமாறு பல்கலைக்கழகம் ஏற்கனவே கோரிக்கைகளை விடுத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமும் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளது. | காலதாமதத்தை குறைத்து, ஒப்பந்த பணிகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இச்செயற்திட்டத்தின் மூலம் 2020 - 2022 காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 41 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான 20 உருப்படிகளுடன் தொடர்புடைய 557 அலகுகள் 04 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரை உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது முக்கியமாக உருப்படியை நிறுவி பயன்படுத்த வேண்டிய சிவில் பணிகள் முழுமையடையாமல் உள்ளது. ஒப்பந்ததாரர்கள் சிவில் பணிகளை பூர்த்தி செய்ய நீண்ட காலத்தை எடுத்தனர். இறுதியாக, அனைத்து வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டு, செயற்திட்டம் முடிவடைவதற்குள் அனைத்து உருப்படிகளும் அவற்றின் முன்மொழியப்பட்ட இடங்களில் நிறுவப்பட்டன, தற்போது அனைத்தும் பயன்பாட்டில் உள்ளன. | செயற்திட்ட வளங்கள் தாமதமின்றி பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாணவர்களின் செயன்முறை திறன்களை மேம்படுத்துதல், விவசாயிகள் மற்றும் சிறிய/ நடுத்தர அளவிலான விவசாய-வணிகர்கள் தரைமட்டத்தில் இருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் கள அறிவை அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கத்துடன் இச்செயற்திட்டத்தின் நிதியேற்பாடுகளில் ரூபா 14 மில்லியன் தொகையை செலவிட்டு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தால் 2021 பெப்ரவரி 24 இல் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூட பேருந்து 2021 மார்ச் முதல் 2023 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 06 சந்தர்ப்பங்களில் மாத்திரமே கல்வி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் பேருந்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தவிர்க்க முடியாத மற்றும் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக ஒன்லைன் முறையில் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் திட்டமிட்டவாறு இந்த வளத்தை பயன்படுத்த முடியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனினும், தற்போது நடைபெற்று வரும் கல்விசாரா தொழிற்சங்க நடவடிக்கை நீக்கப்பட்டவுடன், இந்த வளத்தைப் பயன்படுத்தி பல கள விஜயங்கள், செயல் விளக்கங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி முயற்சிகளை நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்பதை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | செயற்திட்ட வளங்கள் தாமதமின்றி பயன்படுத்தப்பட வேண்டும். |